(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். குழுவின் உறுப்பினர் திரு. இராஜமன்னார்.

திரு சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் பத்தாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லாபியில் இருக்கிற உறுப்பினர்கள் அங்கே சத்தம் போட்டுக்கொண்டோ சண்டைபோட்டுக் கொண்டோ இருக்கக்கூடாது. அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.